இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 21.06.2026

# இருட்டு உள்ளத்தோடு வெள்ளை அறிக்கை!

தி.மு.க. ஆட்சியின்மீது குற்றம் சொல்வதற்காக அல்ல; த.வெ.க. ஆட்சியைத் தப்பிக்க வைப்பதற்காக நிதித்துறை சார்பிலான வெள்ளை அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆட்சியைப் பற்றியோ, நிர்வாகத்தைப் பற்றியோ, நிதியைப் பற்றியோ, அரசாங்கக் கருவூலத்தைப் பற்றியோ எதுவும் தெரியாமல் வாய்க்கு வந்ததை எல்லாம் வாக்குறுதியாக தேர்தலுக்கு முன்னதாக அள்ளி வீசினார் விஜய். அவை எதுவும் நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகள் ஆகும். அவரது சினிமா வசனத்தை நிஜம் என நம்பி வாக்களித்த அப்பாவி வாக்காளர்கள், 'விஜய் அண்ணா! எப்போ அண்ணா வாக்குறுதியை நிறைவேற்றுவீர்கள்?' என்று இப்போதே கேட்கத் தொடங்கி விட்டார்கள்.

- ★ **குழந்தை பிறந்து விட்டது. மோதிரம் எங்கே விஜய் அண்ணா?**
- ★ **கல்யாணம் வெச்சிருக்கேன். தாலிக்குத் தங்கம் எப்போ?**
- ★ **வேலையில்லாமல் இருக்கேன். 4000 ரூபாய் எப்ப வரும்?**
- ★ **அரசுப் பள்ளிகளில் படிக்கும் பிள்ளைகளின் பெற்றோருக்கு 15,000 ரூபாய் எப்போது?**
- ★ **முதியோர் உதவித் தொகை 3000 வந்துவிடுமா?**
- ★ **மகளிர் உரிமைத் தொகை 2,500 எப்போ போடுவீங்க?**

**- இப்படி மக்கள் கேட்கிறார்கள். தேர்வு அறையில், எல்லாம் மறந்து போன மாணவனாக உட்கார்ந்து இருக்கிறார் விஜய். 'இப்ப வர்றேன்' என்றவர், தனியறையில் பதுங்கிக் கொண்டார்.**

'மற்றவங்க மாதிரி நிறைவேற்ற முடியாத வாக்குறுதிகளைக் கொடுக்கிறவன் நான் இல்லை' என்று சொன்னவர் அவர்தான். இப்போது என்ன சொல்கிறார்? ' நீங்க தான் கஜானாவை எல்லாப் பக்கமும் லாக் பண்ணி வெச்சுட்டு போயிட்டீங்களே?' என்கிறார்.

**பழைய மன்னராட்சிக் காலம் போல கஜானா என்றால் லட்சம் கோடி பணத்தை அடுக்கி வைத்திருப்பார்கள் என்று நினைத்தாரா விஜய்? முதலமைச்சர் அலுவலகத்துக்குள் உள்ளே வந்து பார்த்து, 'இங்க என்ன பணத்தையே காணும்' என்று, 'கிணத்தைக் காணோம்' என்பதைப் போல விஜய் குதிக்கிறார். கனைக்கிறார்.**

**ஒரு அரசாங்கத்தின் நிர்வாகத் திறனால் 'நிதி' மூலதனம் திரட்டப்படும். நிர்வாகத் திறன் இல்லாதவர் மட்டுமல்ல, நிர்வாகம் என்றால் என்ன என்ற புரிதலே இல்லாதவர் விஜய் என்பதால்தான் முழிக்கிறார். 'எனக்கு ஆறு மாதம் டைம் கொடுக்க வேண்டாமா?' என்றவர், 30 நாட்களுக்குள் எதற்காக வெள்ளை அறிக்கை வெளியிட வேண்டும்?**

அவர்களுக்குக் கடந்தகால தி.மு.க. அரசைக் குற்றம் சாட்டுவதை விட, 'நாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாத நிலைமையில் இருக்கிறோம், ப்ளீஸ். புரிந்துகொள்ளுங்கள் ப்ரோ' என்று சொல்ல நினைக்கிறார்கள். இருட்டு உள்ளத்தோடு தயாரிக்கப்பட்டுள்ளது இந்த அறிக்கை.

ஆண்டுதோறும் வெளியாகும் நிதிநிலை அறிக்கையைப் படித்தாலே, அதில் தமிழ்நாட்டின் கடன் நிலவரம் இருக்கும். அது எதுவும் தெரியாமல், 'சிவாஜி செத்துட்டாரா?' என்பது மாதிரியான அறிக்கைதான் நிதி அமைச்சர் மரிய வில்சன் வெளியிட்டுள்ள வெள்ளை அறிக்கை.

தமிழ்நாட்டின் மொத்தக் கடன் 13 லட்சம் கோடி ரூபாய் என்று அவர் புதிதாகக் கண்டுபிடிக்கவில்லை. கடந்த தி.மு.க. அரசின் சார்பில் 10 லட்சம் கோடி எனச் சொல்லப்பட்டு இருந்தது. அதில் போக்குவரத்து, மின்சாரம் போன்ற பொதுத்துறை நிறுவனங்களின் கடனையும் சேர்த்து 13.18 லட்சம் கோடி என்கிறார் அமைச்சர் மரிய வில்சன். இதில் கடந்த தி.மு.க. ஆட்சியில் 4.87 லட்சம் கோடி கடன் கூடுதலாகச் சேர்ந்துள்ளது என்பதையும் அவரே சொல்லி இருக்கிறார். மீதிக் கடன்கள் அனைத்தும் அதற்கு முந்தியவை என்பதையும் அவர் ஒப்புக் கொண்டுள்ளார். தி.மு.க. ஆட்சிக்கு வருவதற்கு முன்பே தமிழ்நாட்டின் கடன் 5.13 லட்சம் கோடியாக இருந்தது என்பதையும் அவர் ஒப்புக் கொள்கிறார்.

**'ஒன்றிய அரசின் ஒப்புதல் இல்லாமல் கடன் வாங்கிவிட முடியாது. அந்த உச்சவரம்புக்குள்தான் கடன் தொகை உள்ளது' என்று அமைச்சர் மரிய வில்சன் உண்மையை ஒப்புக் கொண்டுள்ளார். 'மாநிலங்களின் கடன் உச்சவரம்பை ஒன்றிய அரசுதான் நிர்ணயிக்கிறது. ஒன்றிய அரசின் அனுமதி இல்லாமல் மாநிலங்களால் எந்தக் கடனும் வாங்க முடியாது. அவர்கள் அனுமதித்த அளவில்தான் தமிழ்நாடு அரசின் கடன் அளவு இருக்கிறது. அதில் எந்த மாற்றமும் இல்லை' என்று நிதித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் சித்திக் தெளிவாகச் சொல்லிவிட்டார். எனவே, 'கடன் அதிகம்' என்பதற்கான பதிலை நிதி அமைச்சரும், நிதித்துறைச் செயலாளருமே சொல்லி விட்டார்கள்.**

**'மத்திய அரசின் நிதிப் பகிர்வு குறைந்ததால் மாநில வருவாய் வீழ்ச்சி கண்டுள்ளது' என்று இந்த வெள்ளை அறிக்கையிலேயே (பக்கம் 94-98) இருக்கிறது. இதையே அவர்கள் ஒப்புக் கொண்டு இருப்பதற்கு நாம் நன்றி சொல்லத்தான் வேண்டும்.**

தமிழ்நாட்டுக்கு இவ்வளவு கடன் இருக்கிறது என்பதற்கு வெள்ளை அறிக்கை தேவையில்லை. தவறாக வாங்கப்பட்டு இருந்தால், முறையற்ற வகையில் செலவு செய்யப்பட்டு இருந்தால், அதனை வெளிச்சம் போட்டுக் காட்டுவதாக வெள்ளை அறிக்கை இருக்கவேண்டும். அப்படி எந்தக் குற்றச்சாட்டையும் அமைச்சர் மரிய வில்சனால் வைக்க முடியவில்லை.

'முந்தைய ஆட்சியில் செயல்படுத்தப்பட்ட திட்டங்கள் சமூகநலன் சார்ந்தவைதான். அதைக் குறை சொல்லவில்லை. எந்தத் திட்டத்துக்கும், தேவையில்லாமல் நிதி செலவிடப் பட்டதாகக் கண்டறியவில்லை' என்று அமைச்சர் மரிய வில்சன் ஒப்புக் கொண்டுள்ளார்.

வரி வசூல் திறன் குறைந்து விட்டதாம். நாட்டு மக்கள் மீது அதிகப்படியான வரியைப் போடப் போகிறோம் என்பதை மறைமுகமாகச் சொல்கிறார் அமைச்சர் மரிய வில்சன். 'மக்களே தயாராகிக் கொள்ளுங்கள்' என்கிறார்.

'அரசு ஊழியர்களின் ஊதியம், ஓய்வூதியம், வட்டி என மாநிலத்தின் வருவாயில் 64 விழுக்காடு கட்டாயச் செலவாகிறது' என்கிறார் அமைச்சர். **மற்ற மாநிலங்களில் சம்பளம் குறைவு என்ற பட்டியல் எதற்கு? அரசு ஊழியர்களுக்கு ஊதியம் கொடுப்பது தவறு என்கிறாரா?** ஊதியத்தைப் பாதியாக்க நினைக்கிறாரா? உங்களது 'கப்சா' வாக்குறுதிகளை நிறைவேற்ற முடியாமல் போனதற்கு அரசு ஊழியர்கள் சம்பளத்தையும், ஓய்வூதியங்களையும் எதற்காகச் சொல்லிக் காட்டுகிறீர்கள்?

'நாட்டில் முதியோர் எண்ணிக்கை அதிகமாகி வருகிறது' என்று கவலைப்படுகிறார் நிதி அமைச்சர். என்ன செய்யலாம்? வாழும் வயதைக் குறைக்க ஏதாவது சிந்தித்துக் கொண்டு இருக்கிறீர்களா? சமூகநலத் திட்டச் செலவினங்கள் அதிகம் ஆவது குறித்து கவலைப்படும் அரசாங்கம், எப்படி மக்கள் நல அரசாங்கமாக இருக்க முடியும்?

**சுற்றி வளைத்து த.வெ.க. அரசு சொல்ல வருவது, 'எங்களிடம் எந்தப் புதிய திட்டத்தையும் எதிர்பார்க்காதீர்கள்' என்பதுதான். 'ஸாரி ப்ரோ' என்று சொல்வதற்கு 210 பக்கமா?**

●●

## பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ சேவை தொடங்குவதில் தொடரும் தாமதம்!

*சென்னை, ஜுன் 21-*

*சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் முதன்முதலாக நிறைவடைந்துள்ள பூந்தமல்லி பைபாஸ்-வடபழனி இடையிலான நீளமுடைய வழித்தடத்தில் மெட்ரோ சேவை தொடங்குவது மேலும் தாமதமாகியுள்ளது.*

*சென்னை மெட்ரோ ரயில் திட்டத்தின் 2ஆம் கட்டத்தில் பூந்தமல்லி பைபாஸ் - வடபழனி இடையே 14 புள்ளி ஆறு கிலோ மீட்டர் நீளமுடைய வழித்தடத்தில் பணிகள் நடைபெற்று வந்தன. இந்த வழித்தடத்திற்கு கடந்த பிப்ரவரி மாதம் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் நிபந்தனைகளுடன் அனுமதி வழங்கியிருந்தார்.*

*பின்னர், சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் அனைத்து நிபந்தனைகளையும் பூர்த்தி செய்ததைத் தொடர்ந்து மே மாதத்தில் முழுமையான அனுமதியும் கிடைத்தது.*

*இதையடுத்து, சேவையை தொடங்குவதற்கான தொடக்க விழா தேதியை நிர்ணயிக்குமாறு ஒன்றிய அரசிடம் சென்னை மெட்ரோ ரயில் நிறுவனம் சார்பில் கோரிக்கை வைத்தும் இது வரை திறப்பு விழா தேதி அறிவிக்கப்படவில்லை. இதனால் பயணிகள் பெரும் ஏமாற்றம் அடைந்துள்ளனர். இதனால், மேற்கு சென்னை மற்றும் புறநகர் பகுதிகளைச் சேர்ந்த பயணிகள் இன்னும் காத்திருக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. இந்த வழித்தடம் செயல்பாட்டுக்கு வந்தால், தற்போது 90 நிமிடங்கள் ஆகும் ஐயப்பந்தாங்கல் - வடபழனி பயண நேரம் 45 நிமிடங்களுக்கும் குறைவாகும் என பொதுமக்கள் எதிர்பார்க்கின்றனர்.*

## நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர்

# ராகுல் காந்தி பிறந்தநாள்!

### வலைதளத்தில் – கழகத் தலைவர் மு.க,ஸ்டாலின் வாழ்த்து!

சென்னை, ஜீன் 21-

நாடாளுமன்ற மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்கு நேற்று பிறந்த நாளாகும்.

இந்நாளில் ராகுல் காந்தி அவர்களுக்கு வாழ்த்துத் தெரிவித்து கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வலைதளத்தில் பதிவிட்டார்.

அப்பதிவில் கழகத் தலைவர் அவர்கள், "தாங்கள் (ராகுல் காந்தி) நல்ல உடல் நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன்" என்று வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

கழகத் தலைவர் அவர்களின் அந்த சமூக வலைதளப் பதிவு வருமாறு :-



மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி அவர்களுக்குப் பிறந்தநாள் வாழ்த்துகள்.

தாங்கள் நல்ல உடல்நலத்தோடும் மகிழ்ச்சியோடும் திகழ விழைகிறேன்.

இவ்வாறு அவ்வாழ்த்துச் செய்தியில் கழகத் தலைவர் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.

## சட்டம் ஒழுங்கு சீர்கேடு – பொதுமக்கள் வீதியில் இறங்கிப் போராடுகிறார்கள்!

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் - கட்சித் தலைவர்கள் உரையை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும்!

### சட்டப் பேரவை உறுப்பினர்களின் உரையை நேரலையில் ஒளிபரப்பாதது குறித்து முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டி!

**சென்னை, ஜூன் 21–**

**சட்டப்பேரவையில் உறுப்பினர்களின் உரையை நேரலையாக ஒளிபரப்ப வேண்டும் என்றும், ஆளுநர் உரை மீதான விவாதத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் மற்றும் கட்சித் தலைவர்கள் உரையை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்று பேரவைக்கு வெளியே செய்தியாளர்களுக்கு பேட்டியளிக்கையில் முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் குறிப்பிட்டார்.**

முன்னாள் அமைச்சர் சா.சி. சிவசங்கர் செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டி வருமாறு :-

ஆளுநர் உரை மீதான விவாதத்தில் தி.மு.க.சார்பாக பேசுகின்ற வாய்ப்பை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களும், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களும் வழங்கி இன்றைக்கு சட்டமன்றத்தில் என்னுடைய கருத்தை பதிவு செய்தேன். அந்தக் கருத்துகள் நேரலையில் வரும் என்று நாங்கள் எதிர்பார்த்தோம். ஆனால் நேரலையில் வழங்கப்படாததன் காரணத்தினால் அந்தக் கருத்துகளை உங்களிடத்தில் பகிர்ந்து கொள்ளவே உங்களை சந்திக்கிறேன்.

**மரபு மீறிய செயல்!**

ஆளுநர் உரை மாத்திரமல்ல, அந்த உரை நிகழ்த்துகின்ற நேரத்தில் முன்னும் பின்னும் நடைபெற்ற சம்பவங்களையும், அது ஏற்படுத்தி இருக்கின்ற தாக்கத்தையும் குறித்து சட்டப்பேரவையில் நான் பதிவு செய்தேன். பேரவையில் ஆளுநர் உரைக்கு முன்பாக தமிழ்த்தாய் வாழ்த்துப் பாடுவதும், அவரது உரைக்கு பின்பாக தேசிய கீதம் பாடுவதும் ஒரு மரபாக தமிழ்நாட்டில் கடைப்பிடிக்கப்பட்டு வருவதை மீறி நேற்றைக்கு தேசிய கீதத்தை இரண்டு முறை பாட வேண்டிய அவசியம் என்ன என்ற வினாவை நான் எழுப்பினேன்.

அதற்கு நேற்றைக்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் குறிப்பிட்டதைப் போல த.வெ.க. விற்கும் பா.ஜ.க.விற்கும் ஒரு இணக்கமான உறவு இருக்கிறதோ என்ற அந்த அய்யம் தான் வலுப்பெற்று இருக்கிறது. காரணம் ஆளுநர் அவர்கள் நேற்றைக்கு நடந்த நிகழ்வை ஒரு சரித்திர நிகழ்வு என்று பதிவு செய்கிறார். ஆளுநர் உரை நிகழ்த்துவதற்கு ஒரு இணக்கமான முறையில் உரை நிகழ்த்திச் சென்று இருக்கிறார் என்று சட்டப்பேரவைத்தலைவர் நன்றி தெரிவிக்கிறார்.

இப்படி ஒருவருக்கொருவர் நன்றி தெரிவிப்பதும், பாராட்டிக் கொள்வதும் இதைத்தான் வெளிப்படுத்துகிறது என்கின்ற கருத்தைத் தான் நாங்கள் பதிவு செய்தோம். இது மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்று எதிர்பார்த்தோம். நேரலையில் அதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை.

**கழக ஆட்சியின் கருத்துகளை வேறு வார்த்தைகளில் கூறுகிறார்கள்!**

ஆளுநர் உரையில் இடம் பெற்றிருக்கின்ற கருத்துகள் ஏற்கனவே திராவிட முன்னேற்றக் கழக திராவிட



மாடல் ஆட்சி நடைபெற்ற நேரத்தில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் கொள்கைகளாக பறைசாற்றப் பட்டவை. அது மும்மொழிக் கொள்கைக்கு எதிரான கருத்தாக இருந்தாலும், நீட் தேர்வுக்கு எதிர்ப்பாக இருந்தாலும் மீனவர் நலன்களை பாதுகாப்பதாக இருந்தாலும் எல்லாவற்றிலும் திராவிட முன்னேற்றக் கழக கருத்துகளையே அவர்கள் மீண்டும் இங்கே வேறு வார்த்தைகளைப் போட்டு வேறு வண்ணம் பூசி வெளிப்படுத்தியிருக்கிறார்கள்.

அவர்கள் புதிதாக சொன்னது என்றால் சிங்கப் பெண் மாத்திரம் தான். அதுவும் ஏற்கனவே இருக்கின்ற காவல் துறையில் பணியாற்றுகின்றவர்களுக்கு வேறு ஒரு சீருடையை அணிவித்து அது ஏதோ புதிய திட்டம் போல சொல்கிறார்கள் என்ற கருத்தையெல்லாம் பதிவு செய்தோம். அதற்குப் பதிலளித்த அமைச்சர் பெருமக்கள் மழுப்பலாக திசைதிருப்புகின்ற வகையில் தான் பதிலளித்தார்கள். திங்கட்கிழமை அன்றைக்கு எங்களுடைய எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் உரையாற்ற இருக்கிறார். அப்படி உரையாற்றுகின்ற போது, அவர் உரையாற்றுவதை நேரலை செய்யவேண்டும். காரணம் இந்த ஆட்சி மீது நம்பிக்கை தீர்மானம் கொண்டு வருகின்ற போது அதிலே உரையாற்றிய அனைவருடைய உரையும் நேரலையில் சென்று சேர்ந்தது.

**எதிர்க்கட்சித் தலைவரின் கேள்விகள் நியாயமானவை!**

அப்படி சென்று சேர்ந்த நேரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் உரை நேரலையில் சென்று ஒரு மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தி இருக்கிறது. அவர் எழுப்பிய கேள்விகள் எல்லாம் நியாயமானவை தங்கள் மனதில் இருப்பதை என்று தமிழ்நாட்டு மக்கள் எண்ணுகின்ற அளவிற்கு அமைந்திருக்கிறது. ஆனால் அதற்கு முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்காமல் அமைதியாக இருந்தார். வீட்டிற்குப் போய் ஓர்க்கவுட் செய்து மாலை ட்விட்டரில் அதற்குப் பதில் அளித்தார்.

**நேரலையில் ஒளிபரப்ப வேண்டும்!**

அங்கே சட்டமன்றத்தில் கேட்கின்ற கேள்விகளுக்கு அவர் பதிலளிக்காமல் இருக்கின்ற காட்சியை மக்கள் பார்த்து விட்டார்கள் என்ற காரணத்தினால் தான் இன்றைக்கு நேரலை செய்யாமல் தவிர்த்து விட்டார்களோ என்ற சந்தேகம் எங்களுக்கு எழுந்திருக்கிறது. எனவே சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவர் மரியாதைக்குரிய உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலும், மற்ற சட்டமன்றக் கட்சித் தலைவர்கள் உரையாற்றுகின்ற நேரத்திலும் அவற்றை நேரலையில் ஒளிபரப்ப வேண்டும் என்கின்ற அந்தக் கருத்தை இந்த நேரத்தில் நான் வலியுறுத்துகிறேன்.

இதனைத் தொடர்ந்து செய்தியாளர்கள் கேட்ட கேள்விகளுக்கு அளித்த பதில்கள் வருமாறு:-

நாங்கள் முதலில் கேள்வி-பதில் பகுதியை நேரலையில் ஒளிபரப்பி வந்தோம். அதையெல்லாம் செய்யவில்லை என்று சொல்லி தான் ஒரு மாற்றம் வேண்டும் என்று சொல்லி தான் ஆட்சிக்கு வந்திருக்கிறார்கள். சொன்ன மாற்றத்தை அவர்கள் செயல்படுத்தவில்லை என்பதுதான் எங்களுடைய கருத்து.

இந்த ஆட்சி அமைந்ததும், புதுசு புதுசு என்று பேசுகிறீர்கள், எங்கள் கழகத் தலைவர் ஆறுமாதம் அவகாசம் கொடுத்தார். அது எதற்கு என்றால் புதிய திட்டங்களை நீங்கள் அறிவித்த திட்டங்களை செயல்படுத்துவதற்கு புதிய கொள்கையை வழிவகுப்பதற்கு.

**சட்டம் ஒழுங்குப் பிரச்சினைக்கு வாய் திறக்காத முதல்வர்!**

ஆனால் நடைமுறையில் அன்றாடம் சட்டம் ஒழுங்கு பிரச்சினையை சரி செய்வதற்கும், மிகக் குறிப்பாக மக்கள் இன்றைக்குப் பாலியல் பிரச்சினைக்கு எதிராக இன்றைக்கு வெகுண்டெழுந்திருக்கிறார்கள். அது கோவையில் நடந்ததாக இருந்தாலும், கும்மிடிப்பூண்டியில் நடந்ததாக இருந்தாலும், சிறு குழந்தைகள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள், அதை எதிர்த்து எதிர்க்கட்சிகள் நாங்கள் களத்திற்கு வருவதற்கு முன்பாக, எல்லா இடங்களிலும் மக்கள் போராட்டம் நடத்திக் கொண்டிருக்கிறார்கள். எனவே அதற்கு வாய் திறக்க வேண்டும் என்பதற்காகத் தான் நாங்கள் வலியுறுத்தினோம்.

இன்றைக்கும் முதலமைச்சர் அவர்கள் பதில் சொல்லவில்லை. காவல்துறைக்கு பொறுப்பான அமைச்சர் அவர். ஆனால் அவர் பதில் சொல்லாமல், காவல் துறைக்கு நிழல் அமைச்சர் போல் ஆதவ் அர்ஜுனா பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார். எனவே முதலமைச்சர் இதற்கெல்லாம் பதில் சொல்ல வேண்டும் என்பதுதான் எதிர்க்கட்சிகள் என்ற முறையில் மக்களுடைய குரலாக இன்றைக்கு நாங்கள் இங்கே பதிவு செய்துகொண்டிருக்கிறோம்.

நாங்கள் புதிதாக ஆட்சி அமைத்திருக்கிறோம், புதியதாக வந்திருக்கிறோம் கேள்வி பதில், ஜீரோ அவர்ஸ் எல்லாம் அடுத்த கூட்டத் தொடரில் பார்த்துக் கொள்ளலாம் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் அவர்கள் கூறினார்கள். அவர்கள் கோரிக்கையை நாங்கள் ஏற்றுக் கொண்டோம்.

**முதல்வரை கேள்வி கேட்டால் ஆதவ் பதில் கூறுகிறார்!**

ஏற்கனவே இருக்கின்ற காவல் துறைதான் இவை எல்லாம் செய்துக்கிட்டு இருக்கு. நீங்கள் புதியதாக என்ன செய்தீர்கள் என்று ஆஸ்டீன் கேட்டார். அதற்கு முதலமைச்சர் பதில் சொல்லவில்லை என்றுதான் ஆஸ்டின் சொன்னார். அதற்கு பதில் சொல்லாமல் திசை திருப்புகின்ற வகையில் கொளத்தூரையெல்லாம் இழுத்துப் பேசினார் ஆதவ் அர்ஜுனா. நாங்கள் எங்கள் எதிர்ப்பை காண்பித்தோம்.

**பாலியல் பிரச்சினைகளை 6 மாதம் கழித்து பேசமுடியுமா?**

நீண்ட திட்டங்களுக்கு, சட்டம் ஒழுங்கு அன்றாடம் பாதுகாக்க காவல்துறை இருக்கு, அந்தக் காவல் துறைக்குத் தலைவராக முதலமைச்சர் இருக்கிறார். இதனை உடனடியாக செய்ய வேண்டும். இன்றைக்கு ஒரு உயிர் போய் இருக்கு, அதனை 6 மாதம் கழித்து திருப்பிக் கொடுக்க முடியுமா? ஒரு சிறுமிக்கு மிகப் பெரிய கொடூரம் நடந்திருக்கு 6 மாதம் கழித்து பேச முடியுமா? இது அன்றாடம் பேச வேண்டியது. நாங்கள் பேசியது இல்லை. பொதுமக்கள் பேசுகிறார்கள். பொதுமக்கள் வீதியில் இறங்கி போராடிக் கொண்டிருக்கிறார்கள். நீங்களே பார்க்கிறீர்கள். பொதுமக்களுக்கு அவர்கள் பதில் சொல்ல வேண்டும். அவர்கள் பொதுமக்களையும் மதிப்பதாக இல்லை.

இவ்வாறு முன்னாள் அமைச்சர் சா.சி.சிவசங்கர் பேட்டியளித்தார்.

# தமிழ்நாட்டில் 'நீட்' தேர்வை ஒருங்கிணைக்க அதிகாரி நியமனம்!

### த.வெ.க. அரசின் புதிய அரசாணையால் கல்வியாளர்கள் அதிர்ச்சி!

*சென்னை, ஜுன் 21 -*

*தமிழ்நாட்டில் நீட் தேர்வை ஒருங்கிணைத்து நடத்த நோடல் அதிகாரியை நியமித்து தமிழ்நாடு அரசு அரசாணை வெளியிட்டுள்ளது. த.வெ.க. அரசின் புதிய அரசாணையால் கல்வியாளர்கள் அதிர்ச்சியடைந்துள்ளனர்.*

*அரசியலமைப்புச் சட்டத்தின்படி கல்வி தற்போது பொதுப் பட்டியலில் இருப்பதால், நீட் தேர்வு, தேசிய கல்விக் கொள்கை மற்றும் மும்மொழிக் கொள்கை போன்ற விவகாரங்கள் மாநிலங்களில் தாக்கத்தை ஏற்படுத்தி வருகின்றன.*

*கல்வியை பொதுப் பட்டியலிலிருந்து மாநிலப் பட்டியலுக்கு மாற்ற தேவையான நடவடிக்கைகளை தமிழ்நாடு அரசு மேற்கொள்ளும் என தவெக அரசின் ஆளுநர் உரையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.*

*இந்த நிலையில், தேசிய தேர்வு முகமை நடத்தும் நீட் தேர்வுகளை தமிழ்நாட்டில் ஒருங்கிணைத்து நடத்துவதற்காக மாநில நோடல் அலுவலர் நியமிக்கப்பட்டுள்ளார்.*

*தேர்வு தொடர்பான ஒருங்கிணைப்பு பணிகள், ஒன்றிய மற்றும் மாநில அதிகாரிகளுக்கு இடையேயான தகவல் பரிமாற்றம் உள்ளிட்ட பொறுப்புகளை இந்த அலுவலர் மேற்கொள்வார் என தெரிவிக்கப்பட்டுள்ளது.*

*ஒரு புறம் நீட் எதிர்ப்பு, மறுபுறம் நீட் தேர்வுக்கு ஒத்துழைப்பு என இரட்டை வேடம் போடும் த.வெ.க. அரசின் இந்த அரசாணை கல்வியாளர்களை அதிர்ச்சியில் ஆழ்த்தி உள்ளது.*